# படலம் 12
# கனிமவுணவூட்டம்

(நாள்: திசம்பர் 14, 2025
நேரம்: காலை 10:00 மணி - தமிழ்நாடு)

ப. இரத்தனசாமி

# அலகு 4
# தாவர உடற்செயலியல் – PLANT PHYSIOLOGY

| | | |
|---|---|---|
| பாடம் 11. | தாவரங்களில் கடத்தல் | - Transport in Plants |
| பாடம் 12. | கனிமவுணவூட்டம் | - Mineral Nutrition |
| பாடம் 13. | உயர்தாவரங்களில் ஒளிச்சேர்க்கை | - Photosynthesis in Higher Plants |
| பாடம் 14. | தாவரங்களில் மூச்சு | - Respiration in Plants |
| பாடம் 15. | தாவரவளர்ச்சியும் வளராக்கமும் | - Plant Growth and Development |

# இப்படலமுன்னோட்டம்

**நாம் அறிந்தது:** எல்லா வாழுயிரிகளின் வளர்ச்சிக்கும் வளராக்கத்துக்குமான அடிப்படைத்தேவைகள்

- **பெரு மூலக்கூறுகள்**
    - சக்கரேட்டுகள்
    - புரதங்கள்
    - கொழுப்புகள்
- **நீரும் கனிமங்களும்**

**இப்படலத்தில் கற்கவிருப்பது:**

- தாவரங்களின் கனிம ஊட்டத்தேவைகள்
- வளர்ச்சிக்கும் வளராக்கத்துக்கும் தேவையான -
    - தனிமங்களை அறியும் முறைகள்
    - அவற்றின் அவசியத்தை நிலைநாட்டும் முடிவளவைகள்
- அவசியத்தனிமங்களின் பங்கு
    - அவற்றின் குறைபாடுகளால் ஏற்படும் முக்கிய அறிகுறிகள்
    - அவற்றை உட்கவரும் இயங்குமுறைகள்
    - நுண்ணூட்டங்களின் நச்சுமை
- உயிரியலில் நைற்றச இருப்பித்தலின்
    - முக்கியத்துவம்
    - இயங்குமுறை

# படலம் 12ல் கற்கவிருப்பது

12.1 தாவரங்களின் கனிமத்தேவைகளை அறியும் முறைகள்

12.2 அவசியமான கனிமத்தனிமங்கள்

12.3 தனிமங்களை உட்கவரும் இயங்குமுறை


12.4 கரைபொருள்களின் (Solutes) இடமாற்றல்

12.5 அவசியத்தனிமங்களின் தேக்ககமாக மண்

12.6 நைற்றசனின் வளர்சிதைமாற்றம்


# 12.1 தாவரங்களின் கனிமத்தேவைகளை அறியும் முறைகள்

- **மண் இல்லாமலே குறிப்பிட்ட ஊட்டக்கரைசலில் தாவரம் வளர்ந்து முதிரலாம்** - 1860இல் இதைக் கண்டுபிடித்தவர் - **இயூலியசு வான்சேக்கசு** (Julius von Sachs) - **செருமனிய தாவரவியலர்**
  - அப்போதிருந்து, **தாவரங்களுக்குத்தேவையான கனிம ஊட்டங்களை தீர்மானிக்க** பல மேம்படுத்தப்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன
  - **இந்த முறைகளின் சாரம்:** மண்ணில்லாமல் குறிப்பிட்ட கனிமக்கரைசலில் தாவரங்களை வளர்ப்பது
    - ஊட்டக்கரைசலில் தாவரங்களை வளர்க்கும் செய்நுட்பம், **நீர்வேளாண்மை** (hydroponics) எனப்படும்
  - இந்த முறைகளுக்கு **தூய்மையான நீரும், கனிமவூட்ட உப்புகளும் தேவை**




ஊட்டக்கரைசலில் வளர்ப்புக்கான வழக்கமான அமைப்பு


- **தாவர வளர்ச்சிக்கு பொருத்தமான கனிமக் கரைசலை அறிதல்:**
  - ஒரு பரிசோதனைத்தொடரில், தாவரங்களின் **வேர்களை ஊட்டக்கரைசலில் மூழ்க்கி,** அதில் **குறிப்பிட்ட தனிமத்தை சேர்த்தும்– நீக்கியும்-, செறிவை மாற்றியும்** பரிசோதிக்கலாம்
    - இந்த முறையால்,
      - அவசியத்தனிமங்கள் எவை –
      - அவற்றின் குறைபாட்டால் ஏற்படும் அறிகுறிகள் யாவை - என்றும் கண்டுபிடிக்கலாம்



# 12.1 தாவரங்களின் கனிமத்தேவைகளை அறியும் முறைகள் ...

- **நீர்வேளாண்மை** தக்காளி, விதையில்லா வெள்ளரி, சுருட்கோசு போன்ற காய்கறிகளை வணிகநோக்கில் உற்பத்தி செய்ய வெற்றிகரமாக பயன்படுகிறது

- **உகம வளர்ச்சியை** (optimum growth0 **பெற, ஊட்டக்கரைசல்களை போதுமான அளவு வளியூட்டவேண்டும்**
  - கரைசல்களில் போதுமான வளியூட்டம் எதனால் தேவை?
    - மூச்சுவிட தேவைப்படும் **ஆக்குசிசன்** அதனால்தான் வேர்களுக்குக் கிடைக்கும்
    - அதன்மூலந்தான் உணவையும் நீரையும் அவை உறிஞ்ச முடியும்



நீர்வேளாண்மையால் தாவரவுற்பத்தி

# 12.2 அவசியமான கனிமத்தனிமங்கள்

- மண்ணிலுள்ள பெரும்பான்மையான தனிமங்கள், **வேர்களின் வழியாக, தாவரங்களுக்குள் நுழைகின்றன**
- இதுவரை **கண்டுபிடிக்கப்பட்ட 105 தனிமங்களில் - அறுபதுக்கும் மேற்பட்டவை -** தாவரங்களில் உள்ளன
- **சில** தாவர இனங்கள் **செலினியத்தையும்-** வேறு சில **தங்கத்தையும்-** தம்முள் **திரட்டுகின்றன**
- அணுச்சோதனை நிகழும் தளங்களுக்கு அருகில் வளரும் சில தாவரங்கள், **கதிரியக்கமுள்ள துரோன்சியத்தை (strontium)** உள்ளெடுக்கின்றன
- **மிகக் குறைந்த ($10^{-8}$ g/mL) செறிவிலுள்ள** கனிமங்களையும் கண்டறியக்கூடிய செய்நுட்பங்கள் உள்ளன

**கேள்வி:**

- ஒரு தாவரத்தில் இருக்கும் பல்வேறு கனிமங்கள், சான்றாக - மேல் குறிப்பிட்ட **தங்கம், செலினியம்** போன்றவை, **தாவரங்களுக்கு அவசியமா?**
- தாவரங்களுக்கு எது **அவசியத்தேவை**, எது **தேவையில்லை என்பதை எவ்வாறு தீர்மானிப்பது?**


# 12.2.1 அவசியத்தின் முடிவளவைகள் (Criteria for Essentiality)

ஒரு தனிமம் அவசியமாக தேவைப்படுவதை **எந்த முடிவளவைகளால் தீர்மானிக்கலாம்?**


- (அ) அத்தனிமம், **இயல்பான வளர்ச்சியையும் இனப்பெருக்கத்தையும்** ஆதரிக்க முற்றிலும் அவசியமாகவேண்டும்
  - அதாவது, தனிமம் இல்லாதபோது தாவரங்கள் தங்கள் வாழ்க்கைச்சுழற்சியை நிறைவு செய்யவோ விதையிடவோ இயலாது
- (ஆ) தனிமத்தின் **தேவை குறிப்புமமாகவும், மற்றொரு தனிமத்தால் நிறைசெய்ய இயலாததாகவும்** இருக்கவேண்டும்
  - வேறுவிதமாகச் சொன்னால், அவசியமான தனிமம் குறைவதை வேறொரு தனிமத்தை வழங்குவதன்மூலம் ஈடுசெய்யவியலாது
- (இ) அவசியமான தனிமம் **தாவரத்தின் வளர்சிதை மாற்றத்தில், நேரடியாக ஈடுபடவேண்டும்**

# 12.2.1 அவசியத்தின் முடிவளவைகள்...
# (Criteria for Essentiality)

தாவர வளர்ச்சிக்கும் வளர்சிதைமாற்றத்துக்கும், முற்றிலும் அவசியமான தனிமங்கள்:





- அளவியத்தேவைகளின் அடிப்படையில், தனிமங்களை மேலும் இரண்டு பரந்த வகைகளாக பிரிக்கிறோம்
  - **(i) பருமவூட்டங்கள் (Macronutrients)** **(ii) நுண்ணூட்டங்கள் (Micronutrients)**
- **பருமவூட்டங்கள்:** பொதுவாக, தாவரத்திசுக்களில் பெரிய அளவில் உள்ளவை - (உலர்ந்த பொருளில் **10 mmole $Kg^{-1}$க்கு மேலாக**)
  - கரிமம், ஐதரசன், ஆக்குசிசன், நைற்றசன், பாசுபரசு, கந்தகம், பொட்டாசியம், கால்சியம், மெகுனீசியம் ஆகியவை பருமவூட்டங்களில் அடங்குகின்றன
  - இவற்றுள் கரிமம், ஐதரசன், ஆக்குசிசன் ஆகியவை **முதன்மையாக $CO_2$இலிருந்தும் $H_2O$இலிருந்தும்** கிடைக்கின்றன - மற்றவை **மண்ணிலிருந்து கனிமவூட்டங்களாக** உட்கவரப்படுகின்றன
- **நுண்ணூட்டங்கள்: சிற்றளவுத்தனிமங்கள்** (trace elements) எனப்படும் - மிகச்சிறிய அளவில் தேவைப்படுபவை - (உலர்ந்த பொருளில் **10 mmole $Kg^{-1}$க்கு குறைவாக**)
  - இரும்பு, மாங்கனீசு, தாமிரம், மாலிபிடினம், துத்தநாகம், போரான், குளோரின், நிக்கல் ஆகியவை இதில் அடங்குகின்றன
- மேல் குறிப்பிட்ட **17 அவசியத்தனிமங்களைத்தவிர, சோடியம், சிலிக்கான், கோபாற்று, செலினியம்** போன்ற சில பயனுள்ள தனிமங்களும் **உயர்தாவரங்களுக்கு** தேவைப்படுகின்றன




# 12.2.1 அவசியத்தின் முடிவளவைகள்...
# (Criteria for Essentiality)


அவசியத்தனிமங்களை அவற்றின் **பன்மயச் செயல்களின்** அடிப்படையில், **நான்கு பரந்த தொகுதிகளாகவும்** வகைப்படுத்தலாம்




- **(அ)** அணுக்களின் **கட்டமைப்புத்தனிமங்களாக** (structural elements) **உயிரியமூலக்கூறுகளில்** (biomolecules) இடம்பெறும் அவசியத்தனிமங்கள்
  - கரிமம், ஐதரசன், ஆக்குசிசன், நைற்றசன்
- **(ஆ)** தாவரங்களில், **ஆற்றலுடன் தொடர்பான சேர்மங்களில்** இடம்பெறும் அவசியத்தனிமங்கள்
  - இவற்றுக்கு பச்சயங்களிலுள்ள **மெகுனீசியமும்**, அடினசின்முப்பாசுபேட்டிலுள்ள (அமுபாவிலுள்ள) **பாசுபரசும்** சான்றுகள்
- **(இ) ஊக்கிப்புரதங்களை செயலூட்டுவதோ மறிப்பதோவான** அவசியத்தனிமங்கள்
  - **$Mg^{2+}$** இரிபாக்கரிமாக்குசிகவூக்கி-யாக்குசிசனேற்றவூக்கிக்கும் (இரிகசவூக்கி) (ribulose bisphosphate carboxylase-oxygenase), பாசுபயீனாற்பைருவேட்டுக் கரிமாக்குசிக நீக்கவூக்கிக்கும் (phosphoenol pyruvate carboxylase) செயலூட்டுகிறது
    - இவை இரண்டும் ஒளிச்சேர்க்கைய கரிமயிருப்பித்தலுக்கு (photosynthetic carbon fixation) அதிமுக்கியமானவை
  - ஆல்ககாலின் ஐதரசநீக்கவூக்கியை (alcohol dehydrogenase) செயலூட்டும் **$Zn^{2+}$**, நைற்றச வளர்சிதைமாற்றத்தில் நைற்றசவூக்கியை (nitrogenase) செயலூட்டும் **$Mo^{2+}$** ஆகியவை
  - **கேள்வி:** இந்த வகையில் இன்னும் சில தனிமங்களை குறிப்பிட இயலுமா?
    - *குளுகோசு வளர்சிதை மாற்றத்தில் பல்வேறு ஊக்கிப்புரதன்களைச் செயலூட்டுவது - $K^+$*
- **(ஈ)** சில அவசியத்தனிமங்கள் உயிரணுவின் **சவ்வூடியன்மத்தை** (osmotic potential) **மாற்றக்கூடியவை**
  - **பொட்டாசியம்** இலைத்துளையை திறப்பதிலும் மூடுவதிலும் முக்கியப்பங்கை வகிக்கிறது
- ஒரு உயிரணுவின் **நீரியன்மத்தை** (water potential) **தீர்மானிப்பதிலும்** கனிமங்களின் பங்கு உண்டு

# 12.2.1 அவசியமான கனிமத்தனிமங்களின் பட்டியல்



# 12.2.2 பருமவூட்டங்களும் நுண்ணூட்டங்களும் ஆற்றும் பங்கு

- **தாவரவுயிரணுக்களில் அவசியத்தனிமங்களின் பங்கு:** அணுச்சவ்வின் புகவிடுமை, அணுச்சாற்றின் சவ்வூடு செறிவை தகவைத்தல், எதிர்மின்னிகடத்தலமைப்புகள், தாங்கச்செயல், ஊக்கிப்புரதச் செயன்மம் போன்ற வளர்சிதைமாற்ற நிகழ்முறைகளில்
  - இவை பெருமூலக்கூறுகளிலும் உடனூக்கிப்புரதங்களிலும் பெரும் உள்ளடங்கிகள்

## அவசிய ஊட்டத்தனிமங்களின் பல்வேறு செயல்கள்

### முதன்மை பருமவூட்டங்கள்

- **நைற்றசன்:** தாவரங்களுக்கு **அதிக அளவில் தேவைப்படும் அவசிய ஊட்டத்தனிமம்**
  - இது முதன்மையாக **$NO_3^-$** மூலம் கிடைக்கிறது - சிறிதளவு **$NO_2^-$, $NH_3^+$** ஆகவும் கிடைக்கிறது
  - நைற்றசன் தாவரங்களின் **எல்லாப்பகுதிகளிலும் தேவைப்படுகிறது**
    - குறிப்பாக, ஆக்கத்திசுக்களிலும், வளர்சிதைமாற்றத்தில் செயலாற்றும் அணுக்களிலும் தேவைப்படுகிறது
  - நைற்றசன் **புரதங்கள், உட்கருவமிலங்கள், வைட்டமின்கள், அகச்சுரப்புகள்** ஆகியவற்றில் அதிகளவான தனிமங்களுள் ஒன்று
- **பாசுபரசு:** பாசுபரசை **பாசுபேட்டயனிகளின்** ($H_2PO_4^-$, $HPO_4^{2-}$) **வடிவத்தில்** மண்ணிலிருந்து தாவரங்கள் உட்கவர்கின்றன
  - பாசுபரசு **அணுச்சவ்வுகள், சில புரதங்கள், உட்கருவமிலங்கள், உட்கருவைடுகள்** ஆகியவற்றில் இடம்பெறுகிறது
  - எல்லா **பாசுபேட்டேற்ற வினைகளுக்கும்** இது தேவைப்படுகிறது
- **பொட்டாசியம்:** தாவரங்கள் இதை **பொட்டாசியமயனியாக** ($K^+$) உட்கவர்கின்றன
  - இது **ஆக்கத்திசுக்கள், இலைகள், மொட்டுக்கள், வேர்நுனிகள்** ஆகியவற்றில் அதிகளவில் தேவைப்படுகிறது
  - பொட்டாசியம் உயிரணுக்களில் **எதிரயனிக்கும் நேரயனிக்குமான சமநிலையை தகவைக்க** உதவுகிறது
  - **புரதத்தொகுத்தாக்கம், இலைத்துளையை திறப்பதும் மூடுவதும், ஊக்கிப்புரதங்களை செயலூட்டல், அணுக்களின் வீப்புமையை (turgidity) தகவைப்பது** ஆகியவற்றில் முக்கியப்பங்கு வகிக்கிறது

# 12.2.2 பருமவூட்டங்களும் நுண்ணூட்டங்களும் ஆற்றும் பங்கு...

இரண்டாமை பருமவூட்டங்கள்

- **கால்சியம்:** கால்சியத்தை **கால்சியவயனிகளின்** ($Ca^{2+}$) வடிவத்தில் மண்ணிலிருந்து தாவரங்கள் உட்கவர்கின்றன
  - **ஆக்கத்திசுவுக்கும், வேறுபடுத்தத்திசுக்களுக்கும்** கால்சியம் தேவைப்படுகிறது.
  - அணுப்பிரிதலின்போது **அணுச்சுவரின் தொகுத்தாக்கத்தில்** பயன்படுகிறது - **நடுமென்றட்டில்** கால்சிப்பெந்தேட்டாக
  - முழுப்பிரிதலில் **கதிராணி உருவாகும்போது** தேவைப்படுகிறது
  - இது **பழைய இலைகளில் திரள்கிறது**
  - **அணுச்சவ்வுகளின் இயல்பான செயல்களில்** ஈடுபடுகிறது
  - சில **ஊக்கிப்புரதங்களை செயலூட்டுகிறது**
  - **வளர்சிதைமாற்றச்செயல்களை ஒழுங்குறுத்துவதில்** முக்கியப்பங்கு வகிக்கிறது
- **மெகுனீசியம்:** இதை தாவரங்கள் **இருபிணைவுமாக (divalent)** ($Mg^{2+}$) உட்கவர்கின்றன
  - இது **மூச்சுக்கும் ஒளிச்சேர்க்கைக்குமான ஊக்கிப் புரதங்களை** செயலூட்டுகின்றது
  - **அனடி, அனரி** ஆகியவற்றின் **தொகுத்தாக்கத்தில்** ஈடுபடுகிறது
  - மெகுனீசியம் **பச்சையத்தின் வளையக்கட்டமைப்பில்** இடம்பெறுகிறது
  - **புரதமாக்கியின் கட்டமைப்பை தகவைக்க** உதவுகிறது
- **கந்தகம்:** தாவரங்கள் கந்தகத்தை **கந்தகேட்டு $SO_4^{2-}$** வடிவில் பெறுகின்றன
  - இது பையனின் (cysteine), மீத்தயனின் (methionine) ஆகிய **இரண்டு அமினோவமிலங்களில்** உள்ளது
  - பல **உடனூக்கிப்புரதங்களிலும் (coenzymes)**, தயமின், பயோட்டின், ஏவுடனூக்கி போன்ற **வைட்டமின்களிலும்**, **இரும்பாக்குசிசப்புரதங்களிலும்** இடம்பெற்று முக்கியப்பங்கை வகிக்கிறது

# 12.2.2 பருமவூட்டங்களும் நுண்ணூட்டங்களும் ஆற்றும் பங்கு...

நுண்ணூட்டங்கள்


- **இரும்பு:** தாவரங்கள் இரும்பை **இரும்பிக அயனியாக** ($Fe^{3+}$) பெறுகின்றன
  - இது மற்ற நுண்ணூட்டங்களின் **ஒப்பீட்டில் அதிக அளவில் தேவைப்படுகிறது**
  - **எதிர்மின்னிமாற்றலில்** ஈடுபடும் **இரும்பாக்குசிசப்புரதம், அணுநிறமிகள் போன்ற புரதங்களில்** முக்கிய உள்ளடங்கி
  - எதிர்மின்னிமாற்றலின்போது $Fe^{2+}$இலிருந்து $Fe^{3+}$க்கு **மீடிருப்பத்தகு ஆக்குசேற்றத்துக்கு** உள்ளாகிறது
  - **அதியாக்குசைடுச் சிதைப்பூக்கியை (catalase)** செயலூட்டுகிறது - **பச்சையம் உருவாக** அவசியமானது
- **மாங்கனிசு:** இது **மாங்கனிச அயனிகனாக** ($Mn^{2+}$) உட்கவரப்படுகிறது
  - **ஒளிச்சேர்க்கை, மூச்சு, நைற்றச வளர்சிதைமாற்றங்கள்** ஆகியவற்றில் ஈடுபடும் பல **ஊக்கிப்புரதங்களை** செயலூட்டுகிறது
  - ஒளிச்சேர்க்கையின்போது **நீரை பிரித்து ஆக்குசிசனை விடுவிப்பதில்** மாங்கனீசுக்கு சிறந்த திட்டவட்டமான செயல் உள்ளது
- **துத்தநாகம்:** தாவரங்கள் துத்தநாகத்தை **$Zn^{2+}$**அயனிகளாக பெறுகின்றன
  - இது பல்வேறு ஊக்கிப்புரதங்களை, குறிப்பாக **கரிமமில நீக்கவூக்கிகளை** (carboxylases), **செயலூட்டுகிறது**
  - **வளரொழுங்காற்றியின்** (auxin) **தொகுத்தாக்கத்திற்கும்** இது தேவைப்படுகிறது

# 12.2.2 பருமவூட்டங்களும் நுண்ணூட்டங்களும் ஆற்றும் பங்கு...

நுண்ணூட்டங்கள்

- **செம்பு:** தாவரங்கள் இதை **செம்பிக அயனிகளாக** ($Cu^{2+}$) உட்கவர்கின்றன
  - தாவரங்களின் **ஒட்டுமொத்த வளர்சிதைமாற்றத்துக்கு** இது அவசியம்
  - **இரும்பைப்போலவே**, தாவரங்களில் **ஆக்குசேற்றவிறக்க வேதிவினைகளில்** (redox reactions) ஈடுபடும் **ஊக்கிப்புரதங்களுடன்** இது தொடர்புடையது
  - $Cu^{+}$இலிருந்து $Cu^{2+}$க்கு மீடிருப்பத்தகு ஆக்குசேற்றமடைகிறது (reversibly oxidised)
- **போரான்:** இது $\mathbf{BO_3^{3-}}$ **ஆகவோ** $\mathbf{B_4O_7^{2-}}$ ஆகவோ உட்கவரப்படுகின்றது
  - **$Ca^{2+}$ஐ உள்ளெடுக்கவும் பயன்படுத்தவும் - சவ்வு செயலாற்றுதல், பூந்தூள் முளைவிடுதல், அணுநீட்சி, அணுவேறுபடல், கரிமநீரேட்டின் இடமாற்றல்** - ஆகியவற்றிலும் தேவைப்படுகிறது
- **மாலிபிடினம்:** தாவரங்கள் இதை **மாலிபிடேட்டயனிகளின்** ($MoO_2^{2+}$ ) வடிவில் பெறுகின்றன
  - இது **நைற்றசனின் வளர்சிதைமாற்றத்தில் பங்கேற்கும் - நைற்றசவூக்கி, நைற்றேட்டிறக்கவூக்கி** உள்ளிட்ட பல **ஊக்கிப்புரதங்களில்** உள்ளது
- **குளோரின்:** இது **குளோரைடயனியின்** ($Cl^{-}$) வடிவத்தில் உட்கவரப்படுகிறது
  - இது $Na^{+}$உடனும் $K^{+}$உடனும் சேர்ந்து, **உயிரணுக்களில் கரைப்பானின் செறிவையும் எதிரயனிக்கும் நேரயனிக்குமான சமநிலையையும் தீர்மானிக்க** உதவுகிறது
  - **ஒளிச்சேர்க்கையின்போது நீரை பிரித்து ஆக்குசிசனை விடுவிப்பதில்** இது அவசியமாகிறது

# 12.2.2 பருமவூட்டங்களும் நுண்ணூட்டங்களும் ஆற்றும் பங்கு - தொகுப்பு





தாவர உருவவியலில் கனிமவூட்டிகள்

# 12.2.3 அவசியத்தனிமங்களின் குறைபாட்டறிகுறிகள்

- அவசியத்தனிமத்தின் **வழங்கல் மட்டுப்படும்போது,** தாவர வளர்ச்சி வேகங்குறைகிறது
  - ஒரு அவசியத்தனிமத்தின் **செறிவு** எந்தளவுக்கு குறையும்போது தாவரவளர்ச்சி வேகங்குறையத் தொடங்குகிறதோ, அதை அந்த தனிமத்தின் **உய்யச்செறிவு** (critical concentration) என்கிறோம்
  - **தனிமத்தின் செறிவு உய்யச்செறிவைவிட குறையும்போது,** அதன் குறைபாடு தெரியும்
- ஒவ்வொரு தனிமமும், தாவரங்களில் ஒன்றோ மேற்பட்டதோவான குறிப்பிட்ட **கட்டமைப்புப்பங்கையோ செயற்பங்கையோ வகிப்பதால்**, குறிப்பிட்ட தனிமம் இல்லாத நிலையில் தாவரங்கள் சில **உருவமாற்றங்களை** காட்டுகின்றன
  - இந்த உருவமாற்றங்கள், சில **தனிமக்குறைபாடுகளின் காட்டிகளாகின்றன** - இந்த குறைபாடுகளை **அறிகுறிகள்** என்கிறோம்
  - குறைபாட்டின் **அறிகுறிகள், ஒவ்வொரு தனிமத்துக்கும் வேறுபடுகின்றன**
  - குறைபாடுள்ள தனிமத்தை, **ஊட்டமாக தாவரத்துக்கு வழங்கும்போது, அறிகுறிகள் மறையும்**
  - இருப்பினும், **குறைபாடு தொடர்ந்தால்**, அது இறுதியில் தாவரத்தின் **மரணத்திற்கு வழிவகுக்கும்**
- தனிமக்குறைபாட்டின் அறிகுறிகள், தாவரத்தின் **எந்தப்பகுதிகளில் தோன்றுகின்றன என்பது,** தாவரத்தில் தனிமத்தின் **நகர்வுமையை (mobility) சார்ந்திருக்கிறது**
  - தாவரத்தில் **முனைவுடன் அசைவுற்று** - வளரும் **இளந்திசுக்களை சென்றடையும் தனிமங்களுக்கு** - **குறைபாட்டறிகுறிகள் முதலில் பழைய திசுக்களில்** தோன்றும் போக்கு இருக்கிறது
    - சான்றாக, **நைற்றசன், பொட்டாசியம், மெகுனீசியம்** ஆகியவற்றின் குறைபாட்டறிகுறிகள் முதலில், மூப்படைந்த இலைகளில் தோன்றுகின்றன
    - **பழைய இலைகளில்,** இந்த தனிமங்களுள்ள **உயிரியமூலக்கூறுகள் சிதைவதால்**, அந்த தனிமங்கள் **இளம் இலைகளுக்கு நகர்த்தக்கிடைக்கின்றன**

# 12.2.3 அவசியத்தனிமங்களின் குறைபாட்டறிகுறிகள்

- ஒப்பளவில் **அசையாத தனிமங்கள்,** முதிர்ந்த உறுப்புகளிலிருந்து கடத்தப்படாதபோது, **குறைபாட்டறிகுறிகள் இளந்திசுக்களில்** தோன்றும் போக்கு உள்ளது
  - சான்றாக, **கந்தகம் கால்சியம்**போன்ற தனிமங்கள், அணுக் கட்டமைப்பின் பகுதியாவதால் அவை எளிதில் விடுபடுவதில்லை
  - தாவரக்கனிமவூட்டத்தின் இந்த பண்பு, வேளாண்மையிலும் தோட்டக்கலையிலும் அதிமுக்கியமானதும் பொருளுடையதுமாகும்
- தாவரங்களில் காணப்படும் **குறைபாட்டறிகுறிகளுள், பச்சையச்சோகை (chlorosis), தசையிறப்பு (necrosis), தாவர வளர்ச்சிமுடங்கல், இலைகளும் மொட்டுகளும் முதிருமுன் விழுதல், அணுப்பிரிதலின் மறிப்பு** ஆகியவை அடங்குகின்றன
  - **பச்சையச் சோகை** என்பது, பச்சையத்தை இழப்பதால் **இலைகள் மஞ்சளாவது** - அறிகுறி **N, K, Mg, S, Fe, Mn, Zn, Mo** ஆகியவற்றின் குறைபாட்டால் விளைகிறது
  - **தசையிறப்பு**, குறிப்பாக, இலைத் திசுக்களில், **Ca, Mg, Cu, K** ஆகியவற்றின் குறைபாட்டால் விளைகிறது
  - **அணுப்பிரிதலின் மறிப்பு - N, K, S, Mo** ஆகியவை இல்லாததாலோ குறைவதாலோ ஏற்படுகிறது
  - **N, S, Mo** போன்ற சில தனிமங்களின் செறிவு தாவரங்களில் குறையும் போது, **பூத்தல் தாமதமாகிறது**




**எந்தவொரு தனிமத்தின் குறைபாடும், பல அறிகுறிகளை ஏற்படுத்தலாம் - ஒரே அறிகுறி, பல தனிமங்களுள் ஒன்றின் குறைபாட்டாலும் ஏற்படக்கூடும்

***ஒரே தனிமத்தின் குறைபாட்டுக்கு, வெவ்வேறு தாவரங்கள் வெவ்வேறனான மறுவினையளிக்கின்றன

- குறைபாடுள்ள தனிமங்களை அடையாளங்காண, தாவரத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஏற்படும் எல்லா அறிகுறிகளையும் ஆய்விட்டு, அவற்றை ஏற்கெனவே செந்தரமாக தயாரித்த அட்டவணைகளுடன் ஒப்பிடவேண்டும்


# 12.2.4 நுண்ணூட்டங்களின் நச்சுமை (Toxicity)


- நுண்ணூட்டங்களின் தேவை **சிறிதளவு குறைவது, குறைபாட்டறிகுறி**களையும் **சிறிதளவு அதிகரிப்பது நச்சுமை**யையும் உண்டாக்குகின்றன
  - வேறுவிதமாகச்சொன்னால், **தனிமங்களின் செறிவு ஒரு குறுகிய வீச்சிலே உகமமானது** (optimum)
- திசுக்களின் **உலரெடையை, சுமார் 10 நூற்று வீதத்துக்கு குறைக்கும்** எந்த கனிமவயனிச் செறிவையும் நச்சுமையாக கருதுகிறோம்
- இந்த **உய்யச்செறிவு, வெவ்வேறு நுண்ணூட்டங்களிடையில் வெகுவாக மாறுபடுகிறது**
  - நச்சுமையறிகுறிகளை **இனங்காண்பது கடினம்**
  - எந்தத் தனிமத்துக்கும், **நச்சுமைமட்டம்** வெவ்வேறு தாவரங்களிடையில் **வெகுவாக மாறுபடுகிறது**

# 12.2.4 நுண்ணூட்டங்களின் நச்சுமை (Toxicity)...

- பலநேரங்களில், **ஒரு தனிமம் மிகையாவது, மற்றொரு தனிமத்தின் உள்ளெடுப்பை மறிக்கும்**
    - சான்றாக, மாங்கனீசுநச்சுமையின் முன்னிற்கும் அறிகுறி - பச்சையச்சோகையுள்ள நரம்புகள் சூழ்ந்த, **பழுப்புநிறப்புள்ளிகள்**
    - மாங்கனீசு: இரும்புடனும் மெகனீசியத்துடனும் – **மேலெடுப்புக்காகவும்**, மெகனிசியத்துடன்- **ஊக்கிப்புரதப்பிணைப்புக்காகவும்** போட்டியிடுகிறது
    - மாங்கனீசு: தளிருச்சியில் கால்சியத்தின் **இடமாற்றலை மறிக்கிறது**
    - எனவே, மாங்கனீசின் **மிகைத்தன்மை** - உண்மையில் இரும்பு, மெகுனீசியம், கால்சியம் ஆகியவற்றின் **குறைபாடுகளை ஏற்படுத்தலாம்**
    - இவ்வாறு, மாங்கனீசின் நச்சுமையறிகுறிகள், உண்மையில் இரும்பு, மெகுனீசியம், கால்சியம் ஆகியவற்றின் குறைபாட்டறிகுறிகளாகக் காட்டலாம்













# 12.3 தனிமங்களை உட்கவரும் இயங்குமுறை




தாவரங்கள் தனிமங்களை உட்கவர்வதன் இயங்குமுறை, தனிமையாக்கிய அணுக்களிலோ திசுக்களிலோ உறுப்புகளிலோ ஆய்ந்தறியப்பட்டன

- உட்கவர்வின் நிகழ்முறை, இரண்டு முதன்மைக் கட்டங்களாக பிரிக்கப்படும்
  - முதற்கட்டத்தில், அயனிகள் உயிரணுக்களின் **வெளியணுவம்** (apoplast) எனப்படும் வெற்றிடங்களுக்கு - **விரைவாக** - **முனைப்பற்ற (passive) வகையில்** – மேலெடுக்கப்படுகின்றன (uptake)
  - இரண்டாங்கட்டத்தில், அயனிகள் **உள்ளணுவம்** (symplast) எனப்படும் அணுக்களின் உள்ளிடத்துக்கு **மெதுவாக** மேலெடுக்கப்படுகின்றன
- அயனிகள் வெளியணுவத்துக்கு செல்வது, **தெரிவத்துளைகளாக செயலாற்றும் அயனிக்கால்வாய்கள் எனப்படும் சவ்வூடு புரதங்களின்** வழியாக நிகழ்வது வழக்கம்
- அயனிகள் உள்ளணுவத்தில் நுழைவதற்கும், அதிலிருந்து வெளியேறுவதற்கும், **வளர்சிதைமாற்ற ஆற்றல் செலவாகிறது** - ஒரு **முனைப்பநிகழ்முறை** (active process)
- அயனிகளின் அசைவை - **பாயம்** (flux) என்பர்
  - அணுவுக்குள் செல்வது **உட்பாயம்** (influx) - வெளிச்செல்வது **வெளிப்பாயம்** (efflux)

# 12.4 கரைபொருள்களின் இடமாற்றல் (TRANSLOCATION OF SOLUTES)

- கனிமவுப்புகள், **ஆவிப்போக்கின் இழுப்பால்,** தாவரத்தின் **கட்டைத்திசுவின்(xylem)வழி, மேலிழுக்கப்படும் நீரோடையுடன்** இடமாற்றலடைகின்றன
- கட்டைச்சாற்றை பகுப்பாயும்போது, அதில் கனிமவுப்புகள் இருப்பதை காணலாம்
- கனிமத்தனிமங்களின் கதிரியக்கச் சமவிடத்தான்களின் (radioisotopes) பயன்பாடும், கட்டைத்திசுவின்வழி அவை கடத்தப்படுவதை உறுதிப்படுத்துகிறது
- இலைகளில் தொகுத்தாக்கப்படும் குளுகோசு அமினோவமிலம் ஆகியவை, உரியம் (phloem) வழியாக மற்ற இடங்களுக்கு (அதிகச் செறிவிடத்திலிருந்து குறைந்த செறிவுக்கு) இடமாற்றலடையும்
    - இது வீப்பழுத்தத்தாலும், வீப்பசைவு மூலமும் நடைபெறுகிறது







Fig. 15.4. Diagram to illustrate the mechanism of solute translocation according to the Munch's hypothesis.







# 12.5 மண் - அவசியத்தனிமங்களின் தேக்ககம்

- தாவரங்களின் வளர்ச்சிக்கும் வளராக்கத்துக்கும் தேவையான பொரும்பாலான ஊட்டங்கள், **பாறைகள் தேய்வதாலும் உடைவதாலும்** வேர்களுக்கு கிடைக்கின்றன
- இந்த நிகழ்முறைகள், மண்ணை **கரைந்த அயனிகளாலும், அலார்கனிக (inorganic) உப்புகளாலும்** வளமூட்டுகின்றன
- இவை **பாறைக்கனிமங்களிலிருந்து வருவதால்,** தாவரவூட்டத்தில் அவற்றின் பங்கை **கனிமவூட்டம்** என்கிறோம்
- மண்ணில் பலவிதமான பொருள்கள் உள்ளன
  - மண், கனிமங்களை வழங்குவது மட்டுமல்லாமல், அதில் நைற்றசனை இருப்பிக்கும் பாட்டீரியங்களும் மற்ற நுண்ணுயிரிகளும், நீரும் உள்ளன
  - மண், வேர்களுக்கு வளியையும் வழங்குகிறது - தாவரத்தை நிலைப்பாக்கும் பின்னணியாகவும் செயலாற்றுகிறது
  - அவசியக்கனிமங்களின் **குறைபாடு** பயிர்விளைச்சலை பாதிப்பதால், **உரங்களின்மூலம் அவற்றை வழங்கவேண்டிய தேவை** ஏற்படுகிறது
    - பருமவூட்டங்களும்  (N, P, K, S, முதலியன), நுண்ணூட்டங்களும்(Cu, Zn, Fe, Mn, முதலியன), உரங்களின் கூறுகளாக தேவைக்கேற்ப பயன்படுகின்றன



# 12.6 நைற்றசனின் வளர்சிதைமாற்றம்
## 12.6.1 நைற்றசச்சுழற்சி (Nitrogen Cycle)





- **கரிமம், ஐதரசன், ஆக்குசின்** ஆகியவற்றுடன், **நைற்றசனும் உயிரினங்களில் மிகவும் அதிகமான தனிமம்**
- நைற்றசன், **அமினோ அமிலங்கள், புரதங்கள், அகச்சுரப்புகள், பச்சையங்கள், பல வைட்டமின்கள்** ஆகியவற்றில் இடம் பெறுகிறது
- மண்ணில் கிடைக்கும் **அளவுள்ள நைற்றசனுக்காக,** தாவரங்கள் **நுண்ணுயிரிகளுடன்** போட்டியிடுகின்றன
- எனவே, நைற்றசன் இயற்கைவாழ்சூழமைப்பிலும் வேளாண்வாழ் சூழமைப்பிலும், **வரம்பூட்டும் ஊட்டச்சத்து (limiting nutrient)**
- நைற்றசன் மிகவும் வலுவான, **மும்ம உடன் பிணைப்பால்** பிணைந்த, இரண்டு நைற்றசன் அணுக்களாக (N ≡ N) உள்ளது
- **நைற்றசன் ($N_2$) அம்மோனியாவாக மாறும் நிகழ்முறை,** **நைற்றசவிருப்பித்தல் (nitrogen fixation)** எனப்படும்


# 12.6 நைற்றசனின் வளர்சிதைமாற்றம்
## 12.6.1 நைற்றசச்சுழற்சி (Nitrogen Cycle)...

### மூவகைக் குட்டைகளில் நைற்றசச்சுழற்சி

**1.** இயற்கையில், **மின்னலும் புறவூதாக்கதிர்வீச்சும்,** நைற்றசனை நைற்றசாக்குசைடுகளாக (NO, $NO_2$, $N_2O$) மாற்ற போதுமான ஆற்றலை வழங்குகின்றன - தொழிலக எரித்தல்கள், காட்டுத்தீ, தானுந்துகளின் வெளிப்போக்குகள், மின்னுற்பத்தி நிலையங்கள் ஆகியவையும் வளிக்கோள நைற்றசாக்குசைடுகளின் மூலங்கள்

**2.** இறந்த தாவர-விலங்குகளின் ஆர்கனிய நைற்றசன் அம்மோனியாவாக சிதைவது, **அம்மோனியவாக்கம்** (ammonification) எனப்படும்




நைற்றசச்சுழற்சி. வளிக்கோளம், மண், உயிரியத்திரள் ஆகிய மூன்று நைற்றசக்குட்டைகளுக்கிடையான உறவு

**3.** இந்த அம்மோனியாவின் ஒரு பகுதி ஆவியாகி, வளிக்கோளத்தில் மீண்டும் நுழையும் - ஆனால் பெரும்பகுதியை, மண்ணிலுள்ள பாட்டீரியங்கள் நைற்றேட்டுகளாக மாற்றுகின்றன

$$2NH_3 + 3O_2 \longrightarrow 2NO_2^- + 2H^+ + 2H_2O \quad .... (i)$$


$$2NO_2^- + O_2 \longrightarrow 2NO_3^- \quad ...... (ii)$$


# 12.6 நைற்றசனின் வளர்சிதைமாற்றம்
## 12.6.1 நைற்றசச்சுழற்சி.....

$$2NH_3 + 3O_2 \longrightarrow 2NO_2^- + 2H^+ + 2H_2O \quad .... (i)$$

$$2NO_2^- + O_2 \longrightarrow 2NO_3^- \quad ...... (ii)$$

- மண்ணின் நைற்றசோவலகியம், நைற்றோமணியம் ஆகிய பாட்டீரியங்கள், அம்மோனியாவை முதலில் நைற்றைற்றாக ஆக்குசேற்றுகின்றன **(1)**
  - நைற்றோப்பாட்டர் என்ற பாட்டீரியத்தின் உதவியால், **நைற்றைற்று நைற்றேட்டாக** மேலும் ஆக்குசேற்றமடைகின்றது **(2)**
  - இந்த படிகள், **நைற்றவாக்கம்** (nitrification) எனப்படும்
  - இந்த பாட்டீரியங்கள், **வேதித்தானுட்டிகள்** (chemoautotrophs) எனப்படும்
- இவ்வாறு உருவாகும் நைற்றேட்டுகளை தாவரங்கள் உட்கவர்ந்து, இலைகளுக்கு கடத்துகின்றன **(3)**
- இலைகள், **ஆக்குசிறக்கத்தால்** (reduction) அம்மோனியாவை உருவாக்கி, இறுதியாக அமினோவமிலங்களின் அமின்றொகுதியை உருவாக்குகிறது
- மண்ணிலுள்ள நைற்றேட்டை, **நைற்றவிறக்கல்** (denitrification) என்ற நிகழ்முறை, நைற்றசனுக்கு ஆக்குசிறக்குகிறது **(4)**
- இந்த நைற்றவிறக்கலை, போலியலகியம் (Pseudomonas), கந்தக்குச்சியம் (Thiobacillus) ஆகிய பாட்டீரியங்கள் செயற்படுத்துகின்றன **(4)**




# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல் (Biological Nitrogen Fixation)

காற்றில் **ஏராளமாக $N_2$ வடிவில்** கிடைக்கின்ற நைற்றசனை, மிகச்சில உயிரினங்களே பயன்படுத்தவியலும் - சில **குறிப்பட்ட உட்கருவிலி இனங்கள் (prokaryotes) மட்டுமே,** நைற்றசனை **இருப்பிக்கவல்லவை**

- உயிரினங்கள், நைற்றசனை அம்மோனியாவாக ஆக்குசிறக்குவது, **உயிரிய நைற்றசவிருப்பித்தல் (biological nitrogen fixation)** எனப்படும்
- நைற்றசனை ஆக்குசிறக்கும் **நைற்றசவூக்கி** (nitrogenase) என்ற ஊக்கிப்புரதம், உட்கருவிலிகளில் (prokaryotes) மட்டுமே உள்ளது
- இத்தகைய நுண்ணுயிரிகளை, **$N_2$ இருப்பிப்பிகள்** (N2- fixers) என்கிறோம்


$$N \equiv N \xrightarrow{\text{நைற்றசவூக்கி}} NH_3$$

- நைற்றசனை இருப்பிக்கும் நுண்ணுயிரிகள், **தனியுயிரியாகவோ, ஒன்றுயிரியாகவோ** (symbiotic) இருக்கலாம்
- நைற்றசனை இருப்பிக்கும் **வளியத் தனியுயிரி**கள் (aerobic microbes), **அசோற்றோபாட்டரும் (Azotobacter), பெய்சரிங்கமும்**
    - **வளியற்ற (anaerobic) தனியுயிரி, முளரிச்சுருளியம் (Rhodospirillum)**
- அனபேனா (Anabaena), நாசுட்டாகு (Nostoc) போன்ற நீலப்பசும்பாட்டீரியங்களும் **நைற்றசயிருப்பிக்கும் தனியுயிரிகள்**



# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல் ....
# (Biological Nitrogen Fixation)

## ஒன்றுயிரிய நைற்றச இருப்பித்தல் (Symbiotic biological nitrogen fixation)





- ஒன்றுயிரிகளுக்கும், உயிரிய நைற்றச இருப்பித்தலுக்கும், **பல தொடர்புகள் உண்டு**
- இவற்றுள் தெளிவாகத்தோன்றுவது, **பருப்புவகைக்கும் பாட்டீரியங்களுக்குமுள்ள உறவு**
- **கோல்வடிவ கிழங்கியங்களுக்கும் (Rhizobium)** - ஆல்பால்பா, சீனிமூவிலையி, **சீனிப்பட்டாணி**, தோட்டப்பட்டாணி, பேரவரை, மூவிலையவரை **போன்ற பருப்புவகை வேர்களுக்கும் -** இவ்வாறான உறவு உள்ளது
  - **வேர்களில்** இந்த தொடர்புகள், **சிறுகணுக்களாக** (nodules)(வேர்களின் சிறுவளரிகள்) இருப்பது வழக்கம்
- **பிராங்கியம் (Frankia)** என்ற நுண்ணுயிரி, **பருப்புவகையல்லாத தாவரங்களிலும்** (சான்றாக, ஆலுனசு - Alnus) நைற்றசயிருப்பித்தற் சிறுகணுக்களை உண்டாக்குகிறது
- **கிழங்கியமும் பிராங்கியமும்** மண்ணில் தனியாக வாழ்வனவெனினும், ஒன்றுயிரியாக **வளிக்கோள நைற்றசனை இருப்பிக்கவல்லவை**
- ஒரு **பருப்புவகைச்செடி**யை, அது மலர்வதற்கு சற்றுமுன்பு வேருடன் பிடுங்கிப்பார்த்தால், வேர்களில் கிட்டத்தட்ட **கோளவடிவமான புறவளரி**களை காணலாம்
  - **இவை சிறுகணுக்கள்**
  - குறுக்காக வெட்டினால், அதன் மையப்பகுதி சிவப்புநிறத்திலோ செந்நீலநிறத்திலோ இருக்கும்
  - **சிறுகணுக்களை செந்நீலமாக மாற்றுவது எது?**
    - **பருப்பீமோகுளோபின்** (leg-haemoglobin) எனப்படும், பருப்புவகைய **ஈமோகுளோபின்** இருப்பதே இதற்கு காரணம்

# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல் ....
# (Biological Nitrogen Fixation)

## சிறுகணு உருவாதல்


- கிழங்கியத்துக்கும் ஓம்புத்தாவரத்தின் வேர்களுக்குமிடையான, **பல இடைவினைகளின் ஒரு தொடரியால்,** சிறுகணு உருவாகும்
- சிறுகணு உருவாதலின் **முக்கிய படிநிலைகள்**
  - **கிழங்கியங்கள் இனப்பெருகி,** வேர்களின் சூழிடங்களில் கூட்டுச்சமூகமாகி, **புறத்தோலணுக்களுடனும் வேர்முடியணுக்களுடனும்** இணைகின்றன (அ)
  - வேர்முடிகள் **சுருள்கின்றன - பாட்டீரியங்கள் வேர்முடிகளை** முற்றுகையிடுகின்றன (ஆ)
  - ஒரு **கிருமியேற்ற இழை** உருவாகி, **பாட்டீரியங்களை வேரின் புறணிக்கு** எடுத்துச் செல்கிறது (இ)
    - அங்கு அவை **சிறுகணுவுருவாதலை தொடக்குகின்றன**
    - பின்பு பாட்டீரியங்கள், இழையிலிருந்து **அணுக்களுக்குள் விடுபடுகின்றன**
  - இதனால் நைற்றசனை இருப்பிக்கும் **தனித்துவ அணுக்கள் வேறுபடலுக்குள்ளாகின்றன** (ஈ)
  - இவ்வாறு **சிறுகணு** உண்டாகி, ஊட்டங்களை இடைமாற்ற, **ஓம்புநருடன் நேரடியான குழலயிணைப்பை (vascular connection)** உண்டாக்குகிறது





சோயவரையின் வேரில் சிறுகணுக்களின் வளர்ச்சி.

# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல்...

சிறுகணுவில் **நைற்றசவூக்கி, பருப்பீமோகுளோபின்** போன்ற உயிரியவேதிகள் உள்ளன




- **நைற்றசவூக்கி** என்ற- Mo-Fe உள்ள – **ஊக்கிப்புரதம்,** வளிக்கோளத்தின் **நைற்றசன் அம்மோனியாவாக** மாறுவதை வினையூக்குகிறது **(படம்)**





- **அம்மோனியா,** நைற்றசயிருப்பத்தலின் **முதல் நிலைப்புமையான விளைபொருள்** - இந்த வேதிவினை
  - $N_2$ + $8e^-$ + $8H^+$ + 16அமுபா(ATP) → $2NH_3$ + $H_2$ + 16அனிபா(ADP) + $16P_i$
- **நைற்றசவூக்கி, ஆக்குசிசமூலக்கூறுக்கு அதிக சுரணையானது**
- அதற்கு **வளியற்ற நிலவரங்கள் தேவை**
- சிறுகணுக்களில், இந்த ஊக்கிப்புரதத்தை **ஆக்குசிசனிலிருந்து பாதுகாக்கும் தகவமைவுகள்** உள்ளன
  - இவற்றில், **பருப்பீமோகுளோபின்** என்ற **ஆக்குசிசக்கவர்வி** (oxygen scavenger) இருக்கிறது
- இந்த நுண்ணுயிரிகள், **தனியாக வாழும் நிலவரங்களில் வளிவாழ்வன** (இங்கு நைற்றசவூக்கி செயலாற்றவில்லை)
- **ஆனால் நைற்றசயிருப்பிக்கும் நிகழ்வுகளில்** (நைற்றசவூக்கியை பாதுகாக்க), அவை **வளியற்றவையாகின்றன**
- மேற்கண்ட வேதிவினையில், அம்மோனியாவை தொகுத்தாக்க, மிக அதிகளவான ஆற்றலை (ஒரு $NH_3$ உருவாக 8 அமுபாவை) உள்ளிடவேண்டியதிருக்கும்
  - இந்த ஆற்றல், ஓம்புநரின் அணுக்கள் மூச்சுவிடுவதிலிருந்து கிடைக்கிறது

# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல்...

## அம்மோனியாவின் நிலை:

- உடலியங்கிய **அசு**வில் (**அ**மிலச் **சு**ட்டெண் - pH), **அம்மோனியா நேர்மின்னியேற்றமடைந்து,** $NH_4^+$ என்ற **அம்மோனியவயனியா**கும்
  - பெரும்பான்மையான தாவரங்கள், நைற்றேட்டயனியையும் அம்மோனியவயனியையும் தன்வயமாக்கவியலும்
  - எனினும், பிந்தையது, தாவரங்களுக்கு அதிக நச்சுமையானதால், திரளவியலாது
  - இந்த $NH_4^+$, தாவரங்களில் அமினோவமிலத்தை தொகுத்தாக்க பயன்படுகிறது
- இது நடைபெற, இரண்டு முக்கிய வழிகள் உள்ளன:
- **(அ) ஆக்குசிறக்க அமினாக்கல் (Reductive amination):**
  இந்த நிகழ்முறைகளில், அம்மோனியா, α-கீற்றோ குளுட்டரிகவமிலத்துடன் வினைபுரிவதால், குளுட்டமிகவமிலம் உருவாகிறது





α-கீற்றோகுளுட்டரிகவமிலம் + $NH_4^+$ + நிடிருபாத(NADPH) —(குளுட்டமேட்டு / ஐதரசநீக்கவூக்கி)→ குளுட்டமேட்டு+$H_2O$ + நிடிருபா(NADP)

# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல்...

## அம்மோனியாவின் நிலை:....


- **(ஆ) அமினமாற்றம் (Transamination):** இது **அமினோத்தொகுதியை,** ஒரு அமினோவமிலத்திலிருந்து - கீற்றோவமிலத்தின் **கீற்றோத்தொகுதிக்கு, மாற்றுகிறது**
  - முதன்மையாக, அமினோத்தொகுதியான $NH_2$, குளுட்டமிகவமிலத்திலிருந்து மாறும்
  - மற்ற அமினோவமிலங்கள், அமினமாற்றத்தால் (transamination) உருவாகின்றன
  - **அமினமாற்றலூக்கி (transaminase)** என்ற ஊக்கிப்புரதம், இவ்வாறான வேதிவினைகளை வினையூக்குகிறது
  - சான்றாக,





- தாவரங்களில் காணப்படும் இரண்டு மிக முக்கியமான அமைடுகளான- **அசுப்பரசினும் குளுட்டமினும்** (asparagine and glutamine)- **புரதங்களின் கட்டமைப்பில்** இடம்பெறுகின்றன
  - அவை முறையே, அசுப்பரிகவமிலத்திலிருந்தும் குளுட்டமிகவமிலத்திலிருந்தும், ஒவ்வொன்றுடனும் மற்றொரு அமினோத் தொகுதியை சேர்ப்பதால் உருவாகின்றன
  - அமிலத்தின் ஐதராக்குசத்தொகுதியை (hydroxyl), ஒரு அமினோத்தொகுதி (NH2 radicle) மாற்றிடுகிறது


# 12.6.2 உயிரிய நைற்றச இருப்பித்தல்...

- **அமைடுகளில்** (1), **அமினோவமிலங்களைவிட அதிக நைற்றசன்** இருப்பதால், அவை **கட்டையக்குழல்களின்** (xylem vessels) வழியாக, தாவரத்தின் மற்றப்பகுதிகளுக்கு மாற்றலாகின்றன
- மேலும், சில தாவரங்களின் (சான்றாக சோயவரை) சிறுகணுக்கள் - **கடத்தற் றாரையுடன்** (transpiration stream) இருத்திய நைற்றசனை, **உரைடுகளாக** (ureides) (2) கடத்துகின்றன
- இந்த சேர்மங்களிலும் **நைற்றசக்கரிமவிகிதம்,** குறிப்பிடத்தக்கவகையில் **அதிகம்**





(1)




uréides (2)



# பாடச்சுருக்கம் - 1

- தாவரங்கள் தங்கள் **கனிமவூட்டங்களை காற்று, நீர், மண்** ஆகியவற்றிலிருந்து பெறுகின்றன
- தாவரங்கள் பல்வேறு வகையான **கனிமங்களை உட்கவர்கின்றன**
- அவை **உட்கவரும் எல்லா கனிமத்தனிமங்களும் தாவரங்களுக்கு தேவையில்லை**
  - கண்டுபிடிக்கப்பட்ட **105க்கும் மேற்பட்ட தனிமங்களில், 21க்கும் குறைவானவையே,** தாவரங்களின் இயல்பான வளர்ச்சிக்கும் வளராக்கத்துக்கும், அவசியமானவையும் பயனுள்ளவையும்
- பெரிய அளவில் (>10 mmole $Kg^{-1}$) தேவைப்படும் தனிமங்களை - **பருமவூட்டங்கள்** என்றும், குறைந்தளவிலே (>10 mmole $Kg^{-1}$) தேவைப்படுபவற்றை - **நுண்ணூட்டங்கள்** என்றும், அழைக்கிறோம்
- இந்த தனிமங்கள், **புரதங்கள், சக்கரேட்டுகள், கொழுப்புகள், உட்கருவமிலங்கள்** போன்றவற்றின் அவசியமான பல்வேறு **வளர்சிதைமாற்ற செயல்முறைகளில்** பங்கேற்கின்றன
- ஒரு அவசியத்தனிமத்தின் **குறைபாடு, குறைபாட்டறிகுறிகளுக்கு** காரணமாகிறது
  - **பச்சையச்சோகை, தசையிறப்பு, வளர்ச்சிமுடக்கம், குறைந்த அணுப்பிரிதல்** போன்றவை சில முக்கிய குறைபாட்டறிகுறிகள்
- தாவரங்கள் **முனைப்ப நிகழ்முறைகளாலோ, முனைப்பற்ற நிகழ்முறைகளாலோ, வேர்களின்மூலம்** கனிமங்களை உட்கவர்கின்றன
  - கட்டைத்திசுமூலம், அவை உயிரினத்தின் எல்லாப்பகுதிகளுக்கும், நீர்க்கடத்தலுடன் செல்கின்றன

# பாடச்சுருக்கம் - 2

- வாழ்வு நீடிக்க, **நைற்றசன் மிகவும் அவசியமானது**
- தாவரங்கள் **வளிக்கோள நைற்றசனை, நேரடியாக பயன்படுத்தவியலாது**
  - ஆனால் சில தாவரங்கள், குறிப்பாக **பருப்பு வகைகளின் வேர்கள், $N_2$ஐ இருப்பிக்கும் பாட்டீரியங்களுடன் இணைந்து, வளிக்கோள நைற்றசனை, உயிரிகள் பயன்படுத்தக்கூடிய வடிவங்களாக மாற்றுகின்றன**
- $N_2$ஐ இருப்பிக்க, **வலுவான ஆக்குசிறக்கியும், அடினசின் முப்பாசுபேட்டின் வடிவில் ஆற்றலும்** தேவைப்படுகின்றன
- நைற்றசனை இருப்பிக்கும் **நுண்ணுயிரிகளின் (முக்கியமாக கிழங்கியம்) உதவியுடன்,**- $N_2$இருப்பித்தல் நிறைவேறுகிறது
- $N_2$இருப்பித்தலில், முக்கியப்பங்கை வகிக்கும் **ஊக்கிப்புரதமான நைற்றசவூக்கி, ஆக்குசிசனுக்கு மிகவும் சுரணையானது**
- பெரும்பாலான நிகழ்முறைகள், **வளியற்ற சூழலில் நடைபெறுகின்றன**
- தேவையான **ஆற்றல் (அமுபா), ஓம்புயிரியணுக்கள் மூச்சுவிடுவதிலிருந்து கிடைக்கிறது**
- $N_2$இருப்பித்தலால் **விளையும் அம்மோனியா, அமினோத்தொகுதியாக அமினோவமிலங்களுடன் இணைகிறது**